Punalur rivers which run in the Kerala State for the benefit of Madurai, Ramanathapuram, and Tirunelveli districts, and necessary action in this regard will be taken up with the appropriate authorities of the Kerala State.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த பம்பையாறு திட்டத்தைப் பொறுத்தவரையில் சர்க்கார் இதைப்பற்றி இன்வஸ்டிகேஷன் செய்திருக்கிறதா ? இந்தத் திட்டம் எந்தளவு உபயோகரமாகயிருக்கும் என்பதைப்பற்றி சர்க்காரிடம் ஏதாவது புள்ளி விவரங்கள் இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : பம்பையாறு திட்டத்தைப்பற்றி ஏற்கனவே பரிசீலனை செய்தார்கள். கேரள சர்க்காரோடு பேச்சு வார்த்தை நடத்தித்தான் பிற்பாடு அதைப்பற்றி சொல்ல முடியும்.

SRI K. RAMACHANDRAN : அப்பர் பெரியார் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறதே. அது எந்தெந்த ஜில்லாக்களுக்கு பலன் அளிக்கும் ? அதுபற்றி கேரள அரசாங்கத்தோடு ஏதாவது பேச்சு வார்த்தைகள் நடக்கயிருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : அதைப்பற்றி கேரள அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்த உத்தேசமிருக்கிறது. அதனால் ராமநாதபுரம், மதுரை ஜில்லாக்கள் பலன் அடையும்.

SRI M. S. SELVARAJAN : நெல்லை ஜில்லாவிலே புதிய நீர்ப்பாசன திட்டங்களை பரிசீலனை செய்வதற்காக புதியதாக ஒரு சப் டிவிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த சப் டிவிஷன் இத்துடன் வேலையை பூர்த்தி செய்து விட்டதா ? அப்படி பூர்த்தி செய்துவிட்டால் அந்தத் திட்டங்களை மேஜையில் மீது பார்வைக்கு வைப்பார்களா ? 1-30 p.m.

THE HON. SRI P. KAKKAN : இந்த சப் டிவிஷன் பல இடங்களில் பல திட்டங்களைப் பரிசீலனை செய்து அவைகளை ஒவ்வொன்ருக அனுப்பிக்கொண்டிருக்கிருர்கள். அந்தத் திட்டங்களெல்லாம் வந்த பிற்பாடு, அவைகளைப் பரிசீலனை செய்து அரசாங்கம் ஒரு முடிவு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Opening of New Schools in Coimbatore District

* 236 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958–59-ம் வருடத்தில் அதிகப்படியாக ஆரம்பப் பள்ளிக்கூடங்களையும் பல்வேறு பாடசாலைகளிலே அதிகப்படியான வகுப்புக்களையும் ஆரம்பிப்பதற்காகவும் கோயமுத்தூர் ஜில்லா போர்டுக்கு சர்க்காரால் ஒதுக்கப்பட்ட மான்ய தொகையிலிருந்து ஒவ்வொரு தாலூகாவிலும் எத்தனை ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன ?

(ஆ) மொத்தம் எத்தனை அதிகப்படியான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன ?

(இ) எத்தனை மாணவர்களும், மாணவிகளும் கல்வி கற்கச் சேர்த்துக் கொள்ளபட்டார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement [a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix III on page 673 infra.

[29th April 1959

SRI P. G. MANICKAM : ஒவ்வொரு தாலூகாவிலிருந்தும் எத்தனை கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட வேண்டுமென்று சர்க்காருக்கு மனுக்கள் அனுப்பப்பட்டும்கூட, மற்ற இடங்களில் பள்ளிகள் திறக்கப்படாததற்கு காரணம் யாது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது 500 ஜனத்தொகை உள்ள கிராமங்களிலெல்லாம் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவேண்டுமென்று, அநேகமாக எல்லா கிராமங்களிலும் அம்மாதிரி ஏற்பாடு ஆகிவிட்டது. சென்ற ஆண்டில் 300 ஜனத்தொகை உள்ள கிராமங்களிலும் பள்ளிகள் வைக்கலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால், அது இன்னும் முடிவு ஆகவில்லை.

Red Cross Centenary Exhibition

* 237 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of SRI A. A. RASHEED : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have taken stalls in the Red Cross Centenary Exhibition proposed to be held in Madras and the total expenditure proposed to be incurred in that connection?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

It is proposed to incur an expenditure of Rs. 1,49,000.

SRI K. SATTANATHA KARAYALAR : பல கண்காட்சிகளில் வருடாவருடம் சர்க்கார் பங்கு கொள்வதினால், அப்படி கண்காட்சிகளில் நிரந்தரமாகப் பங்கு கொள்ளுவதற்கு தனியாக உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்கு, நிரந்தரமாக ஒரு மெஷினரியை ஏற்படுத்துவதற்கு ஏதாவது சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்காக தனிப்பட்ட அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது.

Appalam and Vermicelli Units

*238 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இரயில்வே போலீஸ்காரர்கள் குடும்பங்களின் வருமானத்தைப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு, அப்பளம், சேமியா தயாரிப்பு ஸ்தாபனம் ஒன்றை நிறுவுவது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறதா ?

(ஆ) அவ்வாறு ஆலோசனை செய்யப்படின் எந்தெந்த இடங்களிலே இந்த ஸ்தாபனம் நிறுவப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI P. G. MANICKAM : போலீஸ்காரர்களின் குடும்பத்தின் வருமானத்தை உயர்த்த, அவர்களுடைய எதிர்கால நல்வாழ்வுக்காக, பின்னல், தச்சு போன்ற வேறு ஏதாவது கைத்தொழில்களை சொல்லிக் கொடுத்து அவர்களுக்கு உதவி செய்வதற்கு சர்க்காரிடம் திட்டம் இருக்கிறதா ?